# A service of Praise and Thanksgiving

## for the Lives and Christian witnesses of

## Gopalan Elizabeth Chandrakanthi (Rani)

## &

## Ponuthurai Rachel Kamaleswary

## 18 - 06 - 2017



கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது.

சங்கீதம் 116 : 15

ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.

I தெசலோனிக்கேயர் 4 : 16

**நிச்சயமாக வெகு சீக்கிரம் நாம்
சுகதேகியாக கர்த்தரது
சந்நிதியில் சந்திப்போம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்."*

*II தீமோத்தேயு 4 : 7-8*

*"I have fought a good fight, I have finished my course, I have kept the faith: Henceforth there is laid up for me a crown of righteousness, which the Lord, the righteous judge, shall give me at that day: and not to me only, but unto all them also that love his appearing."*

II Timothy 4: 7-8

A service of Praise and Thanksgiving conducted

by

Reverend Michael Solomon Vashanthakumar

Emmanuel Christian Felloship - Walthamstow

The United Reformed Church

58 Orford Road, Walthamstow

E17 9QL

Sunday 18th June 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Late Gopalan Elizabeth Chandrakanthi (Rani)



18.06.1957 - 14.02.2017



26.11.1935 - 22.03.2017

## Late Ponuthurai Rachel Kamaleswary



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Order of Service

1. Welcome - Gobalan Niroshan

2. Prayer - Mary Vijayesh

3. Song - அல்லேலூயா துதி மகிமை.

அல்லேலூயா துதி மகிமை - என்றும்
இயேசுவுக்கு செலுத்திடுவோம்.

ஆ அல்லேலூயா அல்லேலூயா (3)

1. கண்ணீர் துடைத்திடுவார்
கவலைகள் போக்கிடுவார்
கரங்களை நீட்டியே கருணையோடு
கர்த்தரே காத்திடுவார் - 2

ஆ அல்லேலூயா அல்லேலூயா (3)
அல்லேலூயா துதி மகிமை

2. ஜெபத்திலே தரித்திருந்து
அவர் சித்தம் நிறைவேற்றுவோம்.
முடிவு பரியந்தம் அவரில் நிலை நிற்க
பெலனை பெற்றுக்கொள்வோம்.

ஆ அல்லேலூயா அல்லேலூயா (3)
அல்லேலூயா துதி மகிமை

3. சென்றவர் வந்திடுவார்
அழைத்தே சென்றிடுவார்
அவருடன் செல்ல ஆயத்தமாவோம்
அவருடன் வாழ்ந்திடவே.

ஆ அல்லேலூயா அல்லேலூயா (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. Eulogy - Dishan Joel Perinpaul

5. Tribute - Pathmalogini Selvendran

6. Poem - Gobalan Niroshan

7. Song - இயேசு ராஜா ஏழை என் உள்ளம்.
By Shanthi Ponniah

இயேசு ராஜா ஏழை என் உள்ளம்
தேடி வந்தீரே

1. என் நேசர் நீர்தானையா
என்னை தேற்றிடும் என் யேசையா
சாரோனின் ரோஜா லீலி புஷ்பமே
சீக்கிரம் வாருமையா – ஐயா

2. உளையான சேற்றினின்று என்னை
உயிர்ப்பித்து ஜீவன் தந்தீர்
அலைபோல துன்பம் என்னை சூழ்ந்தபோது
அன்பாலே அணைத்துக் கொண்டீர் – ஐயா

3. ஆபத்து காலத்திலே நல்ல
அநுக்கிரகம் துணையும் நீரே
அன்பே என்றீர் மகளே என்றீர்
மணவாட்டி நீதான் என்றீர்

4. பரிசுத்த ஆவியினால் என்னை
அபிஷேகம் செய்தீர்
பயங்களை நீக்கி பலத்தையே தந்து
பரிசுத்த மகளாக்கினீர.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. Eulogy - Jeykaran Thirunavukarasu

9. Tribute - Vijaya Kugathas

10. Tribute - Sheba Sutharsan & Nathan Sutharsan

11. Song - என் உயிரான இயேசு

என் உயிரான இயேசு என் உயிரோடு கலந்தீர்
என் உயிரே நான் உம்மைத் துதிப்பேன்
என் உயிரான உயிரான உயிரான இயேசு

1. உலகமெல்லாம் மறக்குதையா
உணர்வு எல்லாம் இனிக்குதையா
உம் நாமம் துதிக்கையிலே இயேசையா
உம் அன்பை ருசிக்கையிலே

என் உயிரான..உயிரான... உயிரான இயேசு x 2

2. உம் வசனம் எனக்கு உணவாகும்
உடலுக்கெல்லாம் மருந்தாகும்
இரவும் பகலுமையா
உந்தன் வசனம் தியானிக்கிறேன்

என் உயிரான..உயிரான... உயிரான இயேசு x 2

3. உம் திரு நாமம் உலகத்திலே
உயர்ந்த அடைக்கல அரண்தானே
நீதிமான் உமக்குள்ளே ஓடி
சுகமாய் இருப்பானே

என் உயிரான..உயிரான... உயிரான இயேசு x 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. Eulogy - Kalyani Lesley

13. Tribute - Bavani Vashanthakumar

14. Tribute - Vijayesh Sivarajah

15. Song - என்னை ஆட்கொண்ட இயேசு

என்னை ஆட்கொண்ட இயேசு
உம்மையாரென்று நானறிவேன்
உண்மை உள்ளவரே – என்றும்
நன்மைகள் செய்பவரே

1. மனிதர் தூற்றும்போது – உம்மில்
மகிழச் செய்பவரே
அதைத் தாங்கிட பெலன் கொடுத்து
தயவாய் அணைப்பவரே
என்னை ஆட்கொண்ட

2. தனிமை வாட்டும்போது – நம்
துணையாய் இருப்பவரே
உம் ஆவியினால் தேற்றி
அபிஷேகம் செய்பவரே
என்னை ஆட்கொண்ட

3. வாழ்க்கை பயணத்திலே
மேகத்தூணாய் வருபவரே
உம் வார்த்தையின் திருவுணவால்
வளமாய் காப்பவரே
என்னை ஆட்கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. Eulogy - Gopalan Sabesan

17. Tribute - Pr Annita Annandie

18. Tribute - Mangayarkkarasy Sutharsan

19. Song - ஆறுதலின் தெய்வமே

ஆறுதலின் தெய்வமே
உம்முடைய திருச்சமூகம்
எவ்வளவு இன்பமானது

1. ஆத்துமா தேவனே உம்மையே நோக்கி
ஆர்வமுடன் கதறுகின்றது
உள்ளமும் உடலும் ஒவ்வொரு நாளும்
கெம்பீரித்து சத்தமிடுது – ஆமென்

ஆறுதலின் தெய்வமே

2. உம்முடைய சந்நிதியில் தங்கியிருப்போர்
உண்மையிலே பாக்கியவான்கள்
தூய மனதுடன் துதிப்பார்கள்
துதித்துக் கொண்டிருப்பார்கள் – ஆமென்

ஆறுதலின் தெய்வமே

3. உம்மிலே பெலன் கொள்ளும் மனிதர்களெல்லாம்
உண்மையிலே பாக்கியவான்கள்
ஓடினாலும் களைப்படையார்
நடந்தாலும் சோர்வடையார் – ஆமென்

ஆறுதலின் தெய்வமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கண்ணீரின் பாதையில் நடக்கும்போதெல்லாம்
களிப்பான நீருற்றாய் மாற்றிக்கொள்வார்கள்
வல்லமை மேலே வல்லமை கொண்டு
சீயோனைக் காண்பார்கள் – ஆமென்

ஆறுதலின் தெய்வமே

5. வேறிடத்தில் ஆயிரம் நாள் வாழ்வதைவிட
உம்மிடத்தில் ஒரு நாள் மேலானது
ஒவ்வொரு நாளும் உமது இல்லத்தின்
வாசலில் காத்திருப்பேன் – ஆமென்

ஆறுதலின் தெய்வமே

20. Sermon - Pastor M S Vashanthakumar

21. Song - எக்காள சத்தம் வானில்

எக்காள சத்தம் வானில் தொனித்திடவே
எம் இயேசு மா இராஜனே வந்திடுவார் (2)

1. அந்த நாள் மிக சமீபமே
சுத்தர்கள் யாவரும் சேர்ந்திடவே (2)
தேவ எக்காளம் வானில் முழங்க
தேவாதி தேவனைச் சந்திப்போமே (2)

எக்காள சத்தம் வானில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வானமும் பூமியும் மாறிடினும்
வல்லவர் வாக்கு தான் மாறிடாதே (2)
தேவதூதர் பாடல் தொனிக்கத்
தேவன் அவரையே தரிசிப்போமே (2)

எக்காள சத்தம் வானில்

3. கண்ணிமை நேரத்தில் மாறிடுவோம்
விண்ணிலே யாவரும் சேர்ந்திடுவோம் (2)
கண்ணீர் கவலை அங்கே இல்லை
கர்த்தர் தாமே வெளிச்சம் ஆவார் (2)

எக்காள சத்தம் வானில்

4. கர்த்தரின் வேளையை நாம் அறியோம்
கர்த்தரின் சித்தமே செய்திடுவோம் (2)
பலன்கள் யாவையும் அவரே அளிப்பார்
பரமனோடென்றும் வாழ்ந்திடுவோம் (2)

எக்காள சத்தம் வானில்

| | | |
|---|---|---|
| 22. Gratitude | - | Gopalan Sutharsan |
| 23. Closing Prayer | - | Kavitha Srinavilns. |
| 24. Blessing | - | Pr. M S Vashanthakumar |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை

அம்மா அகிலத்தில் நாங்கள் அவதரிக்க
ஆண்டவர் அருளிய உறவே.
அம்மம்மா தந்தைக்கு நிகராக ஆதரித்த
பெரும் உறவே.

அம்மா ! உன் நேசத்தால் நாங்கள்
சோகமாய் இருக்கிறோம்

அம்மம்மா ! உன் பாசத்தால் நாங்கள்
பரிதவித்து தவிக்கிறோம்

வார்த்தைகளுக்கு வலிமை இல்லை
எங்கள் இதயத்தின் வலியைச்சொல்ல

அனைத்தையும் நேர்தியாய் செய்வார் - ஆதலால்
அழைத்ததால் அவரண்டை ஆவலாய் சென்றுவிட்டீர்
போதும் இவ்வுகமென மகிழ்வுடன் நுழைந்துவிட்டீர்
அவர் சந்நிதிக்குள் ஆணந்தமாய் வாழ.

மரங்களுக்குள் கிச்சிலி மரம் எப்படி சிறந்ததோ
உறவுகளுக்குள் எங்கள் அம்மா சிறந்தவர்
வெற்றிக்கு பின்னால் ஒரு பெண்ணென்று
உலகம் சொல்லி கேட்பதுண்டு
இன்று தான் அந்த உண்மையை உணர்கிறோம்

தந்தையை பிரிந்து தவித்தோம் அன்று
தந்தையாகவே நீ ஆனாய்... அம்மம்மா..
வறுமையால் பலமுறை வாடிநின்றோம்
அயராது உழைத்து தைரியமூட்டினாய்... தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் சாதனைகளுக்கு பின்னால் நீங்கள்
எங்கள் வேதனைகளில் தேற்றியதும் நீங்கள்
எங்கள் புகளுக்கு பின்னாலும் நீங்கள்
எங்கள் உயர்வுக்கு பின்னாலும் நீங்கள்
எங்கள் ஒழுக்கத்துக்கு பின்னாலும் நீங்கள்

ஒரு மரத்தின் கனிகளை கண்கள் பல கண்டு வியக்கும்
பூக்களின் வாசனை பலரையும் மயக்கும்
ஓங்கி உயர்ந்த மரத்தின் வலிமை பிரமிக்க வைக்கும்.
கனிகள் கிளைகள் பூக்கள் கண்களுக்கு தெரியும்
மரத்தின் வேர் மட்டும் வெளியே தெரிவதில்லை

அம்மா அம்மம்மா நீங்கள் தான் எங்கள் வேர்.
எம்மை தாங்கிய வேர்
எம் உயர்வுகளுக்கு உரமூட்டிய வேர்

இத்தனையையும் நீங்கள் தனியாக செய்யவில்லை
என்பதை நாம் அறிவோம்.
உங்கள் பெலவீனத்தில் இயேசுவின் பலன்
பரிபூரணமாக விளங்கியதாலும்.
அவருடைய கிருபை உங்களுக்கு பூரணமாய்
கிடைத்ததாலும்
அனைத்தையும் நேர்த்தியாய் செய்து முடித்தீர்கள்.
கிறிஸ்துவுடையவர்களுக்கு மரணம் ஒரு முடிவல்ல
அது ஓர் புதிய தொடக்கம்.

மணவாளன் இயேசுவுடன் மகிமையில் நாம் சந்திப்போம்
உங்கள் வழியில் நாம் இயேசுவையே சேவிப்போம்.

**Sutharsan, Sabesan and Niroshan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Appana and Pootamma

I am honoured to be able to say a few words about my wonderful Appanna and Poottamma.

I am still in shock that Appanna and Pootamma have gone. I wake up each day and wish they were still here. I would love to see their faces and hear their voices again. There is not a moment that passes that they are not in my thoughts.

As long as I can remember my Appanna always shared with me the importance of faith. She told with me how Lord Jesus Christ had guided her throughout her life. It is because of her, that my faith has grown strong.

Appana's life was full of loving deeds, forever thoughtful of the needs of others. Today and tomorrow, my whole life through, I will always love and cherish with them both. My dad has told me about Appanna and Pootamma's and his childhood. It is down to the hard work and sacrifices made by Appanna and Pootamma that me and my family have been able to enjoy the rewards of their efforts. I will always remember this and give thanks for what they did. I will always do the best that I can in their name.

I will remember their smile, their warmth and their caring ways. Appana was always with there - through the good times and the bad. Her support and love never ended. My Appana and pootamma can never be replaced and they will be in my heart forever.

I know everyone will miss them both, but for me and Nathan the gap they have left in our lives is so big. They were there for



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

us whenever we needed to talk, no matter the time. We would spend so much time after school and at weekends speaking with them and I will treasure those times. It is because of Appana that Nathan and I have a good teaching of Tamil. We will miss them every second of every day. We can't not imagine how life will continue without them being part of it. Nathan and I will miss you both so much, especially their home cooking and pootamma feeding. I will think of her each time I eat. I hope Appa can see Appana in me, everyone says we are so alike.

I have so many great memories of my Appanna and Pootamma. They both taught me so much in my life and now there is a big hole. Not only was my Appanna a great teacher, she was also a great listener. I knew that I could always go to her with any problems. I would often just take mummy phone and call her. I would tell my news or my worries and she always listened and made me feel better. Appana would always stick up for me and Nathan first. I don't know what I will do now they are gone. I want my Appana back. I can't think of going through my life and not having Appana to share it with me.

My Appana was proud of what she had achieved in life and lived it with no regrets. She was so happy that she could raise her sons and have such a wonderful family. Her sons have achieved the best life they could and that was because of Appana. I know how much she did for us all.

I know I am a little girl but I would like to say thank you to everyone who is here today to pay their respects to my grandmother and great grandmother. I am so blessed to have had them in my life.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appanna I promise I will be good girl and I will take care of Nathan. I love you both and I miss you both.

Rest in peace and one day we will meet again.

**Sheba Sutharsan**

---

## My Appana and Pootamma

There are no words to describe how much my Appana and Pootamma meant to me. I cannot express how much I loved them and will miss them.

My Appanna and Pootamma loved God and worshipped him for the life He gave them. They loved life and they loved their family - they loved their grandchildren.

Appana was a kind and lovely Gramma. Pootamma was loved by everyone. Whenever I was sad Appnna always made me happy.

They were both full of kindness and love and I know you have both returned to the Lord Jesus Christ. They showed me how to follow God, how to pray God and I now pray to Him for his support at this sad time.

I love and miss you both so much. My Appana and Pootamma have gone and now I don't have one. But even though this has been a difficult time for me and my family, we are all comforted by the fact that they are in heaven with God and I will see them again one day.

**Nathan Sutharsan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா , அம்மம்மா

அம்மா, அன்புற்குரிய மிக பாசமான மாமியார். கடந்த 15 ஆண்டுகளாக மாமியாராக இல்லாமல் ஒரு பாசமிக்க தாயாராக அன்பு காட்டி அரவணைத்த அம்மாவை இழந்து தவிக்கிறோம். சிறுவயதிலேயே தாயை இழந்த எனக்கு இன்னொரு தாயாரை போல மகளாகவே அன்பு காட்டிய ஜீவனை இழந்து விட்டோம்.

என்னை அம்மா ஒருபோதும் மருமகளாக எண்ணாமல் தனது ஒரு மகளாக என்மீது மிகுந்த பாசம் காட்டினார். என் மீது எந்தவிதமான குறைகளோ மனஸ்தாபங்களோ காட்டியதில்லை. அம்மா என்னில் மிக நல்ல நம்பிக்கை வைத்து இருந்தார்கள் நான் எல்லாம் நல்லதாகவே செய்வேன் என்று எப்போதும் சொல்லுவார்கள். எனது ஒவ்வொரு வளர்ச்சிகளிலும் பெருமையும் சந்தோசமும் கொண்டிருந்தார். அம்மா என்மீது கொண்டிருந்த எல்லா விருப்பங்களையும் நம்பிக்கைகளையும் நான் ஒரு நல்ல மருமகளாக நிறைவேற்றி விட்டேன்.

நான் எனது அப்பாவை இந்தியாவில் இழந்த போது அம்மா உடனே இந்தியா வந்து என்னுடன் இருந்து அறுதல் படுத்தியதை நான் மறக்க முடியாது.

எனக்கு உடம்பு நலமில்லாமல் போகும் போது தனக்கு வந்தது போல துடித்து போய் போன் மேல் போன் போட்டு விசாரித்து கொணடே இருப்பார்கள் லண்டனில் இருக்கும் போது அருகில் இருந்து அருமையாக கவனிப்பார்கள். லண்டன் வந்தால் எங்களோடு மிக மகிழ்வோடு பக்கபலமாக பெரும் உதவியாக இருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கணவரின் ஒருநாள் பொழுது அம்மாவின் போன் பண்ணுவதில் இருந்து தொடங்கும். அவரை துக்கத்தில் இருந்து எழுப்பி விடுவதில் இருந்து இரவு தூங்க போகும் வரைக்கும் ஒவ்வொரு நாளும் அம்மா தொலைவில் இருந்தாலும் அருகில் இருப்பது போல எங்களோடு இருந்தார்கள்.

ஒரு மூத்த மகனாக சுதர்சன் தனது கடமைகள் எல்லாவற்றையும் ஒரு குறையும் இல்லாமல் மனநிறைவுடன் செய்து இருந்தாலும், அம்மாவின் விருப்பம் எப்போதும் எங்களுடன் வந்து இருப்பதுதான் அந்த ஆசை நிறைவேறும் முன்பே அவர் இல்லாமல் போனதை நினைத்து பார்க்க முடியவில்லை. இது தவிர அம்மா எந்த குறைகளும் இல்லாமல் சிறப்பாக வாழ்ந்தார்கள்.

அம்மம்ம்மா இவர் ஒரு அன்பும் பாசமும் அக்கறையும் உள்ள பாசமான எனது பிள்ளைகளின் பூட்டம்மா. அம்மம்மா முதன்முதலில் லண்டன் வந்தது நான் மூன்று மாதம் கர்பமாக இருக்கும் போது தான். அவர் இங்கு இருந்த ஆறு மாதமும் அவ்வளவு அருமையாக அன்பாக சமைத்து தருவார்கள். ஒவ்வொரு நாளும் விதவிதமாக தனது வயதையும் பொருடபடுத்தாமல் செய்வார்கள். அதனால்தானோ என்னவோ மகளுக்கு பூட்டம்மா ஊட்டுவதுதான் விருப்பம். எப்போதுமே பூட்டம்மா மாதிரி எனக்கு ஊட்ட தெரியாது என்பாள்.

பெற்ற தாயாருக்கு நிகரான மாமியார் கிடைப்பது ஒரு வரம். எனக்கு அந்த வரம் கிடைத்தும் நீண்ட காலம் அவருடன் வாழ கொடுத்து வைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது அம்மா இல்லாத வாழ்க்கையை நினைத்து பார்க்கவே கஷ்டமாக உள்ளது.

அம்மாவுக்கும் அம்மம்மாவுக்கும் எப்போதும் Sheba, Nathan பற்றிய நினைவு தான். ஒவ்வொரு நாளும் போனில் பேசுவதும் தமிழ் பேச வேண்டும் என்று விரும்புவதும் என தமிழில் பேசிக் கொண்டே இருப்பார்கள்.

அம்மாவும் அம்மம்மாவும் கிட்டதட்ட ஒரே நேரத்தில் தத்தம் கணவர்களை இழந்த போதும் மனம் தளராமல் உறுதியோடு நம்பிக்கையோடு வாழ்க்கையை எதிர்கொண்டு ஒருத்தருக்கொருத்தர் துணையாக இருந்து பிள்ளைகளை வளர்த்தார்கள். அதே போல ஒன்றாகவே மறைந்து விட்டார்கள்.

அம்மாவோடு நீண்டகாலம் ஒரு மகளை போல இருந்தது தான் என் நினைவில் இருக்கிறது இவர்கள் இல்லாத இந்த நாட்களை கடப்பது என்பது மிகவும் கடின நாட்களாக உள்ளது இனி வரும் எமது நாட்கள் எப்படி இருக்க போகிறதோ தெரியவில்லை. நாங்கள் இனிவரும் காலங்களில் அமைதியாக மன பலத்தோடும் உறுதியோடும் வாழ்வதற்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அருள் தரும் படி வேண்டுகின்றோம்.

**Mangai Sutharsan**

**Thank you** for your Presence and Prayers. Never are we more aware of how much Friends and Family mean than at the time of bereavement. Your thoughtfulness did so much to ease our Sorrows.

**Gopalan Family**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்குநாட்கள் வராததற்குமுன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்குமுன்னும்,

இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்குமுன்னும், அவரை உன் வாலிபப்பிராயத்திலே நினை.

காரியத்தின் கடைத்தொகையை கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே.

ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்.

பிரசங்கி **12:1,7, 13-14**

**Remember your Creator in the days of your youth, before the days of trouble come and the years approach when you will say, "I find no pleasure in them"**

**and the dust returns to the ground it came from, and the spirit returns to God who gave it.**

**Now all has been heard; here is the conclusion of the matter: Fear God and keep his commandments, for this is the duty of all mankind.**

**For God will bring every deed into judgment, including every hidden thing, whether it is good or evil.**

**Ecclesiastes 12: 1, 7, 13 - 14**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org